Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ் ®

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்






மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 288 | உள்ளூர் - 16.10.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 288 | வெளியூர் - 17.10.2026 | சனிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com


**சுக்கிரன்-சந்திரன் சேர்க்கை: சாதகம் யாருக்கு?**

**செவிலியர் ஆட்சேர்ப்பு: 237 காலிப்பணியிடங்கள்!**

**ஆசிரியர் பணி: காத்திருப்போருக்கு வாய்ப்பு!**

**அரசியல் உறுதி! விஜய் பாணியில் தனுஷ்!**

## தொகுதி மறுவரையறை மசோதா! அக்டோபர் இறுதியில் நாடாளுமன்ற சிறப்பு அமர்வு?

புதுடெல்லி, அக். 16–

மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதாக்களை நிறைவேற்ற இந்த மாத இறுதியில் சிறப்புக் கூட்டத்தொடரைக் கூட்ட மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின்றன.



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் கடந்த ஜூலை 20–ஆம் தேதி தொடங்கி ஆக.13 வரை நடைபெற்றது. இந்த கூட்டத் தொடரில் மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை மசோதா மீண்டும் கொண்டுவரப்படும் என்ற ஊகங்கள் வெளியாகின. ஆனால், எதிர்க்கட்சிகளின் அமளிக்கு மத்தியில் மொத்தம் 12 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்ட நிலையில், மகளிர் இடஒதுக்கீடு மசோதா மீண்டும் கொண்டுவரப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து, கடந்த ஆக.13–இல் இரு அவைகளும் தேதி குறிப்பிடாமல் அவைத் தலைவர்களால் ஒத்திவைக்கப்பட்டன. வழக்கமாக நாடாளுமன்ற கூட்டத் தொடர் இவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட பிறகு 4–5 நாள்களில் கூட்டத் தொடரை முறைப்படி முடித்துவைக்கும் அறிவிப்பை குடியரசுத் தலைவர் வெளியிடுவார். ஆனால், மழைக்கால கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டு 2 மாதங்களாகியும் இந்த அறிவிப்பு வெளியாகவில்லை.

இதனால் புதிய அமர்வை கூட்டாமலேயே மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை கொண்டுவர மத்திய அரசு விரும்புகிறது என்ற ஊகங்கள் வலுவடைந்த நிலையில், அக்டோபர் இறுதியில் நாடாளுமன்ற சிறப்பு அமர்வை கூட்ட மத்திய அரசு முடிவெடுத்திருப்பதாக ஆங்கில ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

2029 மக்களவைத் தேர்தலில் இருந்து 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை அமலாக்குவதுடன், அதற்கேற்ப மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 850 வரை அதிகரிக்க வகை செய்யும் அரசமைப்புச் சட்டத்தின் 131–ஆவது திருத்த மசோதா, கடந்த ஏப்ரலில் நடைபெற்ற நாடாளுமன்ற சிறப்பு அமர்வில் கொண்டுவரப்பட்டது.

அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா நிறைவேற மொத்த உறுப்பினர்களின் (543) எண்ணிக்கையில் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளும், வாக்கெடுப்பில் பங்கேற்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை வாக்குகளும் தேவை. ஆனால், மசோதா மீதான வாக்கெடுப்பில் மூன்றில் இருபங்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கப் பெறாததால் தோல்வியடைந்தது.

இந்த நிலையில், மீண்டும் மசோதாக்களை தாக்கல் செய்யும் போது, அதனை நிறைவேற்ற தேவையான ஆதரவை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதற்காக, திரிணமூல் காங்கிரஸின் அதிருப்தி எம்.பி.க்கள் மத்திய அரசுக்கு ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தியா கூட்டணியிலிருந்து விலகியுள்ள திமுகவின் 22 எம்.பி.க்கள், சிறிய கட்சிகளின் எம்.பி.க்கள் ஆகியோரின் ஆதரவையும் உறுதி செய்ய மத்திய அரசு தீவிர பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தொகுதி மறுவரையறை மசோதாவில் மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பால் தங்களின் பிரதிநிதித்துவம் குறையும் என்று திமுக எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், அவர்களின் ஆதரவை உறுதி செய்ய, அனைத்து மாநிலங்களிலும் ஒரே சீராக 50 சதவிகித தொகுதிகள் அதிகரிப்பு என்ற அம்சத்தை இணைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

## கர்நாடகத்தின் புதிய கவர்னராக சுதா யாதவ்!

பெங்களூரு, அக். 16–

கர்நாடகத்தின் புதிய கவர்னராக சுதா யாதவ் பதவி ஏற்கிறார். கவர்னர் மாளிகையில் உள்ள கண்ணாடி மாளிகையில் இந்த பதவி யேற்பு விழா நடைபெற உள்ளது. கர்நாடக ஐகோர்ட்டு தலைமை நீதிபதியான விபு பக்ரு, புதிய கவர்னர் சுதா யாதவுக்கு பதவி பிரமாணம் செய்து வைக்க உள்ளார். இதற்கான ஏற்பாடு களை கவர்னர் மாளிகை அதிகாரிகள் மேற்கொண்டு வருகிறார்கள். பதவி ஏற்பு விழாவில் முதல்–மந்திரி டி.கே.சிவக்குமார் மற்றும் மந்திரிகள் பங்கேற்க உள்ளனர். பதவி ஏற்பு விழா நடைபெற உள்ளதால். சுதா யாதவ் நேற்று மாலையில் விமானம் மூலமாக பெங்களூருவுக்கு வருகை தந்தார். பின்னர் அவர். கவர்னர் மாளிகையில் தங்க வைக் கப்பட்டுள்ளார்.



சுதா யாதவ், கர்நாடகத்தின் 14–வது கவர்னர் ஆவார். அதே நேரத்தில் மாநிலத்தில் 2–வது பெண் கவர்னர் சுதா யாதவ் ஆவார். இதற்கு முன்பு கடந்த 1999–ம் ஆண்டு முதல் 2002–ம் ஆண்டு வரை வி.எஸ்.ரமாதேவி பதவி வகித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## கோவையில் முதல்வர் விஜய்! உற்சாகம்!!

கோவை, அக். 16–

கோவையில் நிகழ்ச்சியில் பங்கேற்ப தற்காக சென்னை விமான நிலையத்திலி ருந்து முதல்வர் விஜய் கோவை வந்தார்.

கோவை காந்திபுரத்தில் சிறைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் ரூ. 300 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு ள்ள பெரியார் அறிவுலகம் மற்றும் அறிவியல் மையத்தை தமிழக முதல்வர் விஜய் வெள்ளிக்கிழமை (அக்.16) திறந்து வைத்தார்.






விழாவில் பங்கேற்பதற்காக அவர் சென்னை விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு கோவை வந்தார்

கோவை வந்தடையும் முதல்வர் விஜய், அங்கிருந்து 11.45 மணியளவில் காந்திபுரம் பெரியார் அறிவுலகத்துக்கு சாலை வழியாக வருகை தந்து கல்வெட்டை திறந்து வைத்தார் .

தொடர்ந்து, பிற் பகலில் நடந்த அரசு விழாவில் கலந்துகொண்டு புதிய வளர்ச்சிப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதனிடையே, கோவை விமான நிலையத்தில் தொடங்கி, அவிநாசி சாலை, காமராஜர் சாலை சந்திப்பு, லட்சுமி மில்ஸ் சந்திப்பு, எல்.ஐ.சி சந்திப்பு வழியாக காந்திபுரம் அறிவுலகம் வரையில் 11.4 கி.மீ. தொலை வுக்கு முதல்வர் விஜய் இன்று சாலை வலம் சென்றார். இதையொட்டி கோவையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## வீரபாண்டிய கட்டபொம்மனின் தியாகமும் தீரமும் வரலாற்றில் அழியாத பெருமையாக நிலைத்திருக்கும்: முதல்வர் விஜய்!

சென்னை, அக். 16–

வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவுநாளில், அவரது தியாகமும் தீரமும் தமிழர் வரலாற்றில் அழியாத பெருமையாக நிலைத்திருக்கும் என முதல்வர் விஜய் கூறியுள்ளார்.



வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவுநாளில் முதல்வர் விஜய் கூறியிருப்பதாவது, "ஆங்கிலேய ஆட்சியின் அடக்குமுறைக்கு அடிபணியாமல், தாய்மண்ணின் உரிமைக்காகவும், சுயமரியாதைக்காகவும் இறுதிவரை போராடிய விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவு நாளில், அவரது தியாகத்தைப் போற்றி வணங்குகிறேன்.

அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கும் துணிவும், உரிமைகளைக் காக்கும் உறுதியும், தாய்மண்ணைப் போற்றும் உணர்வும் ஒவ்வொருவரிடமும் வளர வேண்டும் என்பதற்கு அவரது வாழ்க்கை வரலாற்றுப் பாடமாகத் திகழ்கிறது.

வீரபாண்டிய கட்டபொம்மனின் தியாகமும், தீரமும் தமிழர் வரலாற்றில் என்றும் அழியாத பெருமையாக நிலைத்திருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

## வாக்காளர் பட்டியல் திருத்தம்!

# தமிழகம் உட்பட 17 மாநிலங்களில்! பெயர் சேர்க்க புதிய வாய்ப்பு!

## ஜனவரி 4–ல் இறுதிப் பட்டியல்!!



புதுடெல்லி, அக். 16–

புதிய வாக்காளர்கள் மற்றும் எஸ்ஐஆர்–ல் விடுபட்டவர்களைச் சேர்ப்பதற்காக தமிழகம் உட்பட 17 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் சிறப்பு சுருக்கத் திருத்தம் (எஸ்எஸ்ஆர்) மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

நாடு முழுவதும் பல்வேறு கட்டங்களாக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்ஐஆர்) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பல்வேறு குளறுபடிகளும், முறைகேடுகளும் இருப்பதாகவும், 13 கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டு இருப்பதாகவும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றன. இந்த முறைகேடுகளுக்குப் பொறுப்பேற்று தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி இந்தியா கூட்டணிக் கட்சிகளும், கரப்பான் பூச்சி ஜனதா கட்சியும் (சிஜேபி) தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

இந்தியா கூட்டணித் தலைவர்கள் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவிடம் மனு அளித்தது மட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்துள்ளனர். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி சார்பில் தாக்கல் செய்த இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தபோது உரிய பதில் அளிக்க தேர்தல் ஆணையத்திற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த சர்ச்சைகளுக்கு மத்தியில் நேற்று (15அக்டோபர் 2026), புதிய திருப்பமாக புதிய வாக்காளர்கள் மற்றும் எஸ்ஐஆர்–ல் விடுபட்டவர்களைச் சேர்ப்பதற்காக தமிழ்நாடு உட்பட 17 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் சிறப்பு சுருக்கத் திருத்தம் (எஸ்எஸ்ஆர்) மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:

சிறப்பு சுருக்கத் திருத்தம் தமிழகம், மேற்கு வங்கம், உத்தர பிரதேசம், பஞ்சாப் மற்றும் பிஹார் உள்ளிட்ட 17 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் நடத்தப்பட உள்ளது. இதில் சேர்க்கப்பட வேண்டியவர்களுக்கான தகுதி நாளாக ஜனவரி 1, 2027 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 2–ம் தேதிக்குள் வாக்குச்சாவடிகள் மறுசீரமைக்கப்படும். நவம்பர் 12–ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை நவம்பர் 12 முதல் டிசம்பர் 11 வரை தாக்கல் செய்யலாம். இவற்றின் மீது டிசம்பர் 28–ம் தேதிக்குள் முடிவு எடுக்க வேண்டும். இறுதி வாக்காளர் பட்டியல் 2027 ஜனவரி 4 அன்று வெளியிடப்படும். 2027 ஜனவரி 1 தகுதித் தேதிக்கான கோரிக்கைகளுடன் ஏப்ரல் 1, ஜூலை 1 மற்றும் 2027 அக்டோபர் 1 ஆகிய மூன்றுபிந்தையதகுதித்தேதிகளுக்கான முன்கூட்டிய விண்ணப்பங்களையும் தேர்தல் பதிவு அலுவலர்கள் ஏற்றுக்கொள்வார்கள். பெயர் சேர்க்க வேண்டியவர்கள் படிவம் 6 மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

மொத்த வாக்காளர்களில் 2 சதவீதத்துக்கும் அதிகமான பெயர் நீக்கங்கள் முன்மொழியப்பட்டால், தேர்தல் பதிவு அதிகாரிகள் அவற்றை நேரடியாகச் சரிபார்க்க வேண்டும். எந்தவொரு வாக்குச்சாவடியிலும் 1,200 வாக்காளர்களுக்கு மேல் இருக்கக்கூடாது. வாக்காளர்கள் இரண்டு கிலோமீட்டருக்கு மேல் பயணிக்கவோ அல்லது இயற்கைத் தடைகளைக் கடக்கவோ தேவையில்லை. மேலும் வாக்குச்சாவடிகள் தரைத்தளத்தில் அமைய வேண்டும்.

ஒரே கதவு அல்லது ஒரே அடுக்குமாடி எண் கொண்ட குடும்பங்கள், வெவ்வேறு பிரிவுகளிலோ அல்லது வாக்குச்சாவடிகளிலோ பிரிக்கப்படக்கூடாது.

ஒரே நபர் ஐந்துக்கும் மேற்பட்ட எதிர்ப்புகளை அளித்திருந்தாலும், தேர்தல் பதிவு அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்ய வேண்டும். ஒவ்வொரு நீக்கல் வழக்கிலும் சம்பந்தப்பட்ட நபருக்கு விளக்கம் அளிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்ட பின்னரே தேர்தல் பதிவு அதிகாரிகள் காரணங்களுடன் கூடிய உத்தரவை வழங்க வேண்டும். அந்த உத்தரவு தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றப்பட வேண்டும்.

பெறப்படும் கோரிக்கைகள் மற்றும் எதிர்ப்புகள் தொடர்பான பட்டியல்கள் ஒவ்வொரு வாரமும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளின் இணையதளங்களில் வெளியிடப்பட வேண்டும். அரசியல் கட்சிகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

இந்த எஸ்எஸ்ஆர் நடைமுறை தமிழ்நாடு, அசாம், பிஹார், சத்தீஸ்கர், கோவா, குஜராத், கேரளா, மத்திய பிரதேசம், மணிப்பூர், பஞ்சாப், ராஜஸ்தான், உத்தர பிரதேசம், உத்தராகாண்ட் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய 14 மாநிலங்களிலும், அந்தமான் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவு மற்றும் புதுச்சேரி ஆகிய 3 யூனியன் பிரதேசங்களிலும் நடைபெற உள்ளது.

ஆந்திரப் பிரதேசம், அருணாச்சல பிரதேசம், சண்டிகர், தாத்ரா மற்றும் நகர் ஹவேலி, டாமன் மற்றும் டையூ, ஹரியானா, ஜார்கண்ட், கர்நாடகா, மகாராஷ்டிரா, மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, டெல்லி, ஒடிசா, சிக்கிம், திரிபுரா மற்றும் தெலங்கானா ஆகிய பகுதிகளில் எஸ்ஐஆர் நடைபெற்று வருவதால் அல்லது சமீபத்தில் முடிவடைந்துள்ளதால், அந்தப் பகுதிகளுக்கான எஸ்எஸ்ஆர் அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

இமாச்சல பிரதேசம், ஜம்மு–காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய பகுதிகளில் எஸ்ஐஆர் இன்னும் தொடங்கப்படாததால், அங்குள்ள வானிலைச் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்த அட்டவணை பின்னர் வெளியிடப்படும். இவ்வாறு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எஸ்ஐஆர், எஸ்எஸ்ஆர் என்ன வித்தியாசம்?

எஸ்எஸ்ஆர் (சுருக்கமான திருத்த நடைமுறை — Special Summary Re–vision) என்பது, அரசியல் மற்றும் சட்ட ரீதியான சர்ச்சைகளுக்கு உள்ளான 'சிறப்பு தீவிர திருத்த நடைமுறை' (எஸ்ஐஆர் — Special Intensive Re–vision) என்பதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு செயல்முறையாகும்.

எஸ்ஐஆர் முறையில் வாக்காளர் பட்டியல் புதிதாக மறுசீரமைக்கப்படுகிறது. ஆனால் எஸ்எஸ்ஆர் முறையில் ஏற்கெனவே உள்ள பட்டியலில் தேவையான திருத்தங்கள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன.

எஸ்எஸ்ஆர் என்பது ஆண்டுதோறும் நடத்தப்பட வேண்டிய ஒன்றாகும். இதன் முந்தைய சுழற்சிக்கான கால அட்டவணை 2024 ஆகஸ்ட் 7 அன்று வெளியிடப்பட்டது. அதன் இறுதி வாக்காளர் பட்டியல்கள் 2025 ஜனவரி 6 முதல் 10–ஆம் தேதிக்குள் வெளியிடப்பட்டன.

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 16.10.2026
விசுவாவசு தமிழ் வருடம்
புரட்டாசி மாதம் 29-ம் தேதி

# அமெரிக்கக் கனவு கலைகிறதா?



அமெரிக்கா சென்றால் வாழ்க்கை உறுதியாகிவிடும் என்ற நம்பிக்கையை, மாறிவரும் வேலைவாய்ப்புச் சூழல் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. பணிநீக்கம், விசா நிச்சயமின்மை, நிரந்தரக் குடியுரிமைக்கான நீண்ட காத்திருப்பு ஆகியவற்றுக்கு இடையே, தாயகம் திரும்பும் இந்தியத் தொழில்நுட்பப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாக வெளியாகியுள்ள தகவல்கள் கவனத்திற்குரியவை.

எக்ஸ்ஃபீனோ நிறுவனத்தின் தரவுகளை மேற்கோள்காட்டும் செய்தியின்படி, 2023ஆம் ஆண்டில் 7,200 பேர் அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியுள்ளனர். 2025இல் இந்த எண்ணிக்கை 15,100 ஆக உயர்ந்துள்ளது. 2026ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலேயே சுமார் 12,700 பேர் திரும்பியுள்ளதாகக் கூறப்படுகிறது. இவை தொழில்நுட்பப் பணியாளர்கள் குறித்த மதிப்பீடுகள்; அமெரிக்கவாழ் இந்தியர்கள் அனைவரின் நிலையையும் பிரதிபலிக்கும் கணக்காகக் கருதிவிடக் கூடாது.

இந்த மாற்றத்தை வெறும் பெட்டி, படுக்கையைக் கட்டிக்கொண்டு வெளியேறும் நிகழ்வாகச் சுருக்குவது, மனிதர்களின் வாழ்க்கைப் போராட்டத்தை மலினப்படுத்துவதாகும். ஒவ்வொரு பயணப்பெட்டிக்குப் பின்னாலும் கல்விக்காகச் செய்த முதலீடு, குடும்பத்தின் எதிர்பார்ப்பு, குழந்தைகளின் எதிர்காலம், முதிய பெற்றோரின் ஏக்கம் ஆகியவை இருக்கின்றன.

பணிநீக்கமும் விசா சிக்கலும் சிலரைத் திரும்பச் செய்கின்றன. பெற்றோரைப் பராமரிக்கவும் குடும்பத்துடன் வாழவும் சிலர் விரும்பித் திரும்புகின்றனர். இரண்டையும் ஒரே தோல்விக் கணக்கில் எழுதுவது நியாயமல்ல.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்ப மாற்றங்கள் வேலைகளின் தன்மையை மாற்றுகின்றன. ஆனால் வேலைவாய்ப்புச் சிக்கல்கள் அனைத்திற்கும் அதையே ஒற்றைக் காரணமாக்கிவிட முடியாது. நிறுவனங்களின் செலவுக் கட்டுப்பாடு, சந்தைத் தேவை, குடியேற்ற நடைமுறைகள் ஆகியவற்றையும் சேர்த்தே ஆராய வேண்டும்.

இந்தியாவுக்கு இப்போது எழுந்துள்ள கேள்வி தெளிவானது: உலக அனுபவத்துடன் திரும்பும் திறமையாளர்களுக்கு நாம் என்ன வாய்ப்புகளை வழங்கப் போகிறோம்?

தரமான வேலைகள், ஆராய்ச்சிக்கான முதலீடு, தொழில் தொடங்குவதற்கான எளிய நடைமுறைகள், அனுபவத்திற்கேற்ற ஊதியம் ஆகியவற்றை உருவாக்க வேண்டியது அரசுகளின், தொழில் நிறுவனங்களின் பொறுப்பு. அவர்களது சேமிப்பை வரவேற்கும் அளவுக்கு, அவர்களது திறமையையும் மதிக்க வேண்டும்.

தாயகம் திரும்புவதை வெற்றியாக்குவது விமான நிலைய வரவேற்பல்ல; அதற்குப் பிறகு கிடைக்கும் கண்ணியமான வாழ்க்கையே!

**எழுதியவர்:**

**ஆசிரியர்: மதுரை மணி.**



ஈரோடு மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு துறையின் சார்பில் ‘‘ரெட் ரன்’’ மாரத்தான் விழிப்புணர்வு ஓட்டத்தை ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி ஐஏஎஸ்.., கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் துணை இயக்குனர் மருத்துவர் ரவீந்திரன், மருத்துவர் ரமேஷ் பாபு, துரைசாமி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட சின்னக்குளம் நுண்ணுயிர் உரமாக்கும் கூடத்தில், பொதுமக்கள் மற்றும் சந்தைகளில் பெறப்படும் கழிவுப்பொருட்களான காய்கறிகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயாரிக்கும் முறைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் துர்காமூர்த்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மரக்கன்றுகள் நடும் பணியினை தொடங்கி வைத்தார். உடன் ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் சுவேதா உட்பட பலர் உள்ளனர்.

# ஆசிரியர் பணி: காத்திருப்போருக்கு வாய்ப்பு!



சென்னை, அக். 16–
ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் எஸ்.சேதுராம வர்மா நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இடைநிலை ஆசிரியர் நியமனம் தொடர்பாக 2024–ம் ஆண்டு வெளியிடப்பட்ட தற்காலிக தெரிவு பட்டியல்களுக்கு காத்திருப்போர் பட்டியல் கடந்த பிப்.11–ம் தேதி ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் (www. trb.tn.gov.in) வெளியிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து, பணியில் சேராத மற்றும் பணியில் சேர்ந்த பிறகு ராஜினாமா செய்த ஆசிரியர்களின் விவரங்கள் பெறப்பட்டன. அவர்கள் தொடர்புடைய அதே இன சுழற்சியில் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள் அந்த இடத்துக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அந்த பட்டியல் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு சம்பந்தப்பட்ட துறையால் நியமன ஆணை வழங்கப்படும்.

# சுட்ட எண்ணெய்யை பயன்படுத்தினால் ஆபத்து?. 150-க்கும் மேற்பட்ட அறிவிப்புகள்; புதிய லேபிளிங் விதிகள்!. FSSAI



சென்னை, அக். 16–
பொரிக்கப் பயன்படுத்திய எண்ணெய்யை மீண்டும் மீண்டும் சூடாக்குவதால் அதன் வேதியியல் தன்மை மாறி உடல்நலப் பாதிப்புகள் ஏற்படலாம் என FSSAI எச்சரித்துள்ளதாகச் செய்தி தெரிவிக்கிறது.

தவறான விளம்பரங்கள், லேபிளிங் விதிமீறல்கள் தொடர்பாக உணவு நிறுவனங்களுக்கு 150–க்கும் மேற்பட்ட நோட்டீஸ்களும், உணவகங்கள் மற்றும் கிளவுட் கிச்சன்களுக்கு 30–க்கும் மேற்பட்ட நோட்டீஸ்களும் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

**முக்கிய அம்சங்கள்:**

அதிக சர்க்கரை, உப்பு, கொழுப்புள்ள உணவுகளுக்குச் சிவப்பு எச்சரிக்கை லேபிள் முன்மொழிவு. விரைவு விநியோகச் செயலிகளில் தயாரிப்பு தேதி, காலாவதி தேதி, பேட்ச் எண் விவரங்கள்; கிடங்குகளில் சுகாதார ஆய்வு. உணவகங்களில் கலோரி விவரங்கள், சுகாதாரம், உரிமம் புதுப்பித்தல் ஆகியவற்றில் கண்காணிப்பு. அனலாக் பன்னீரை ‘பன்னீர்’ என்ற பெயரில் விற்கக் கூடாது என்ற அறிவுறுத்தல்.

# தேசியக் கொடியுடன் சிஜேபி போராட்டம்! பாதுகாப்பு அதிகரிப்பு!



புதுடெல்லி, அக். 16–
கரப்பான்பூச்சி ஜனதா கட்சி வெள்ளிக்கிழமை (அக்.16) நடத்தத் திட்டமிட்டுள்ள போராட்டத்தை முன்னிட்டு, தில்லியின் பல்வேறு பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தில்லியில் போராட்டம் நடத்தக்கூடிய இடங்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட ஜந்தர் மந்தரில் அத்துமீறி நுழைந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சிஜேபி நிர்வாகிகள் அஷ்தோஷ் ரங்கா, சௌரவ் தாஸ் ஆகியோர் 5 நாள்கள் நீதிமன்றக் காவலில் புதன்கிழமையில் (அக். 14) திகார் சிறையில் அடைக்கப்பட்டனர். தேசியக் கொடியுடன் போராடிய சிஜேபியினர் கைது செய்யப்பட்டதை எதிர்த்து கன்னாட் பிளேஸில் தேசியக் கொடியுடன் வெள்ளிக்கிழமை (அக். 16) போராட்டம் நடத்தப்படும் என சிஜேபி நிறுவனர் அபிஜீத் தீப்கே அறிவித்தார்.

மேலும், கன்னாட் பிளேஸில் உள்ள சென்ட்ரல் பார்க்கில் நடைபெறும் ‘லேஹ்ரா தோ திரங்கா’ என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் போராட்டத்தில் தேசியக் கொடியுடன் பங்கேற்குமாறு அபிஜீத் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தப் போராட்டத்தை முன்னிட்டு, கன்னாட் பிளேஸ் மற்றும் ஜந்தர் மந்தர் ஆகிய இடங்களிலும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும், கன்னாட் பிளேஸ் என்பது போராட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடம் அல்ல என்று மூத்த காவல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# திமுகவினர் மீது தவெகவினர் தாக்குதல்? முன்னாள் அமைச்சர் கண்டனம்!



சென்னை, அக். 16–
திமுகவினரை தவெகவினர் தாக்கியதாக முன்னாள் அமைச்சர் சேகர்பாபு கண்டன தெரிவித்து கூறியிருப்பதாவது, தவெக அரசின் நிர்வாகச் சீர்கேடுகளைக் கண்டித்து வியாழக்கிழமை (அக். 15) நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் முடிந்து, திமுகவினர் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, பேசின் பிரிட்ஜ் அருகே நடைபெற்ற ஆளும் கட்சியின் அராஜக சம்பவங்கள் கடும் கண்டனத்துக்குரியவை. முதல்வர் விஜய் செல்லும் வழியில், அவ்வழியாக ஆர்ப்பாட்டம் முடிந்து திமுகவினர் வீடு திரும்பிக் கொண்டிருந்த நிலையில், தவெக–வினர் அவர்களை மறித்து அவதூறாகப் பேசி, அவர்கள் வைத்திருந்த கொடிகளைப் பறித்துத் தாக்கினர். இதற்குப் பதிலாக “திமுக வாழ்க! தலைவர் வாழ்க!” என திமுகவினர் முழக்கமிட்டனர்.

இந்த நிலையில், முதல்வரின் வாகன அணிவகுப்பில் சென்ற அமைச்சர் ஒருவரின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை கிழக்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணியின் துணை அமைப்பாளர் மகுடனை காவல்துறையினர் கைது செய்து காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து, காவல்துறையின் நடவடிக்கையைக் கண்டித்து முழக்கமிட்ட செந்திலை ஆளும் கட்சியை சார்ந்த தவெகவினர் –கண்மூடித்தனமாக காட்டுமிராண்டித் தாக்குதலில் ஈடுபட்டனர். இதையடுத்து, செந்திலை காவல்துறை வாகனத்தில் அழைத்துச் சென்றபோது, அந்த வாகனம் விபத்துக்குள்ளானதில் அவர் பலத்த காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, தோள்பட்டை எலும்பு முறிவுடன் அவர் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இதில் கூடுதல் தகவல் என்னவென்றால் அழைத்துச் சென்ற காவ ல்துறைவாகனம் வாகனத் தகுதி சான்றிதழ்கூட (FC) செய்யாமல் இருந்திருக்கிறது.

தகவலறிந்ததும், நானும் கழக நிர்வாகிகளும் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று மருத்துவர்களைச் சந்தித்து, அவருக்கு உரிய சிகிச்சை அளிக்குமாறு வலியுறுத்தினோம். இருப்பினும், ஆளுங்கட்சியினர், அமைச்சர்கள், காவல்துறையினரின் அழுத்தம் காரணமாக, அவர் முழுமையான சிகிச்சை பெறுவதற்கு முன்பே வியாழக்கிழமை மாலையே வீட்டுக்கு அனுப்பப்பட்டார். தற்போது, அவர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவத்திற்குச் சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். காவல்துறையின் இந்நடவடிக்கை குறித்துத் தகுந்த விளக்கமும், முறையான விசாரணையும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

இதுபோன்ற அடக்குமுறைகளுக்கும், அராஜகங்களுக்கும், பொய் வழக்குகளுக்கும் அஞ்சிப் பின்வாங்கும் இயக்கமல்ல திராவிட முன்னேற்றக் கழகம் என்று தெரிவித்துள்ளார்.

# ராமநாதபுரத்தில் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வுப் பேரணி!



ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பொது அறுவை சிகிச்சைத் துறை சார்பில், மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அக்டோபர் 7 முதல் 31ஆம் தேதி வரை நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் பங்கேற்றனர். மார்பக சுயபரிசோதனை மற்றும் ஆரம்பகால நோயறிதலின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. முகாம்களில் பெண்களுக்கு மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் பெண் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.



தேனி மாவட்டம் உத்தமபாளையம் தாலுகா காமாட்சிபுரம் வேளாண் அறிவியல் மைய கூட்ட அரங்கில் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சார்பில் சர்வதேச மகளிர் விவசாயிகள் தினத்தை முன்னிட்டு உழவர் மேளா, வேளாண் கருத்தரங்கம் மற்றும் வேளாண் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் சிவகிருஷ்ணமூர்த்தி திறந்துவைத்து பார்வையிட்டார். உடன் தேனி பாராளமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன், கம்பம் எம்.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா ஆகியோர் உடன் உள்ளனர்.



# சுக்கிரன்-சந்திரன் சேர்க்கை: சாதகம் யாருக்கு?



ஜோதிடக் கணிப்பின்படி, 2026 நவம்பர் 6ஆம் தேதி வக்ர நிலையில் உள்ள சுக்கிரன், துலாம் ராசியிலிருந்து கன்னி ராசிக்குச் சென்று சந்திரனுடன் இணைகிறார். இந்தச் சேர்க்கையால் உருவாகும் கலாத்மக யோகம், நவம்பர் 7 மாலை 5:14 மணி வரை நீடிக்கும் எனக் கூறப்படுகிறது. இதனால் மேஷம், துலாம், விருச்சிகம், மகரம் ஆகிய ராசிகளுக்குப் பல்வேறு வாய்ப்புகள் கிடைக்கலாம்.

**மேஷம்:** ஆறாம் வீட்டில் நிகழும் சேர்க்கையால் பணித்திறமை வெளிப்பட்டு அங்கீகாரம் கிடைக்கலாம். பதவி உயர்வு, கூடுதல் பொறுப்புகள் வரக்கூடும். புதிய தொடர்புகளும் திட்டங்களும் பயனளிக்கும். நிதிநிலையில் முன்னேற்றம் ஏற்படலாம். மாணவர்களுக்குப் படிப்பில் சாதகமான சூழல் உருவாகும்.

**துலாம்:** நீண்டநாள் நிலுவைப் பணிகளை முடித்து பாராட்டுப் பெறலாம். வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கக்கூடும். கலைத்துறையினருக்குப் படைப்பாற்றலும் வருமானமும் அதிகரிக்கலாம். குடும்பத்தில் சிறிய கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் உறவினர்கள், தந்தையின் ஆதரவு கிடைக்கும். நல்ல செய்தி மகிழ்ச்சியளிக்கலாம்.

**விருச்சிகம்:** பயணங்கள் இனிய அனுபவங்களைத் தரலாம். மதிப்பும் மரியாதையும் உயரக்கூடும். நிதிநிலையை மேம்படுத்த முன்முயற்சி அவசியம். வாய்ப்புகள் வரும்வரை காத்திருக்காமல் தேடிச் செயல்படுவது உதவும். உணவுமுறை, அன்றாடப் பழக்கங்களில் நல்ல மாற்றங்களும் படைப்புச் செயல்களும் மனநிறைவைத் தரலாம். காதல் உறவில் நேர்மறையான திருப்பம் ஏற்படக்கூடும்.

**மகரம்:** வரவேண்டிய பணம் கிடைத்து வசதிகள் அதிகரிக்கலாம். வேலை தேடுபவர்களுக்குச் சாதகமான வாய்ப்புகளும் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு அல்லது புதிய பொறுப்புகளும் கிடைக்கக்கூடும். வணிகத் திட்டங்கள் எதிர்பார்த்த பலனைத் தரலாம். உயர்கல்வி முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கைத்துணையுடன் நெருக்கம் அதிகரிக்கலாம்.

இந்தக் காலத்தில் தொழில், கல்வி, குடும்பம் சார்ந்த முயற்சிகளில் கவனம் செலுத்தலாம் எனக் கட்டுரை தெரிவிக்கிறது. குறிப்பாக புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்துவதும் நிலுவைப் பணிகளை முடிப்பதும் முக்கியத்துவம் பெறுகின்றன.

**குறிப்பு:** இவை பொதுவான ஜோதிடக் கணிப்புகள் மட்டுமே. பிறந்த தேதி, நேரம், இடம் மற்றும் தனிப்பட்ட ஜாதக அமைப்பைப் பொறுத்துப் பலன்கள் மாறுபடும். அனைவருக்கும் ஒரே மாதிரியான முடிவுகள் கிடைக்கும் என்று கருதக்கூடாது.




இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் மாண்புமிகு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மரு.கோ.க.அருண்ராஜ் , குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ.மதன் ராஜா செவிலியர்களுக்கு பணிநியமண ஆணைகளை வழங்கினார்கள். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு செயலர் மரு.தரேஷ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# திருப்பூர் திரையரங்குகளில் ஜெயிலர்-2 கொண்டாட்டம்!



திருப்பூரில் ஜெயிலர்–2 திரைப்பட வெளியீட்டை ரஜினி ரசிகர்கள் ஆட்டம், பாட்டத்துடன் உற்சாகமாகக் கொண்டாடினர். சக்தி, கணேஷ் உள்ளிட்ட திரையரங்குகள் விழாக்கோலம் பூண்டன. நான்கு திரையரங்குகளில் படம் பார்க்க வந்த ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு ரசிகர் மன்றத்தினர் தலா ஐந்து கிலோ அரிசியை இலவசமாக வழங்கினர். கணேஷ் திரையரங்கில் பெண்களுக்கான சிறப்புக் காட்சி ஏற்பாடு செய்யப்பட்டு, இலவச டிக்கெட்டுகளும் வழங்கப்பட்டன. விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதே நோக்கம் என ரசிகர்கள் தெரிவித்தனர்.




## பூண்டு ஆண்களின் பாலியல் ஆரோக்கியத்தை மேம்படுத்துமா?



பூண்டு சமையலுக்கு மணமும் சுவையும் சேர்ப்பதுடன், வைட்டமின் பி6, வைட்டமின் சி மற்றும் சில தாதுக்களையும் வழங்குகிறது. பூண்டு சார்ந்த துணை உணவுகள், அதிக கொழுப்பு மற்றும் உயர் ரத்த அழுத்தத்தைச் சிறிதளவு குறைக்க உதவலாம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனினும், இந்தப் பலன்களைச் சுட்ட பூண்டு சாப்பிடுவதுடன் நேரடியாக ஒப்பிட முடியாது.

சுட்ட பூண்டு சாப்பிட்டால் ஆண்களின் பாலியல் திறன், டெஸ்டோஸ்டிரோன் சுரப்பு அல்லது கருவுறுதல் திறன் அதிகரிக்கும் என்பதற்குப் போதுமான மனித ஆய்வு ஆதாரங்கள் இல்லை. இரவில் இரண்டு அல்லது மூன்று பூண்டுப் பற்கள் சாப்பிட்டால் உடலிலுள்ள நச்சுக்கள் முழுமையாக வெளியேறும், முதுமை தாமதமாகும், உடல் எடை குறையும்போன்றகூற்றுகளும்உறுதிப்படுத்தப்படவில்லை.

பூண்டை வழக்கமான உணவில் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் அதிகமாகச் சாப்பிடுவது வயிற்றுவலி, வாயுத்தொல்லை அல்லது குமட்டலை ஏற்படுத்தலாம். பூண்டு துணை உணவுகள் ரத்தக்கசிவு அபாயத்தை அதிகரிக்கக்கூடும்; குறிப்பாக ரத்த உறைதலைத் தடுக்கும் மருந்துகள் எடுத்துக்கொள்பவர்கள் மருத்துவரிடம் ஆலோசிக்க வேண்டும்.

பாலியல் ஆரோக்கியத்துக்கு சீரான உணவு, உடற்பயிற்சி, போதுமான தூக்கம் மற்றும் மனஅழுத்தக் கட்டுப்பாடு முக்கியம். தொடர்ந்து பாலியல் பிரச்சினைகள் இருந்தால், பூண்டைத் தீர்வாக நம்பாமல் மருத்துவரை அணுகுவது அவசியம். குறிப்பிட்ட நேரத்தில் பூண்டு சாப்பிடுவதால் மட்டும் கூடுதல் பலன் கிடைக்கும் என்பதற்கும் உறுதியான ஆதாரம் இல்லை. உணவுப் பழக்கத்தை மாற்றுவது மருத்துவப் பரிசோதனைக்கும் தேவையான சிகிச்சைக்கும் மாற்றாகாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தனிப்பட்ட ஆலோசனையே சிறந்த வழி.




## அரசியல் உறுதி! விஜய் பாணியில் தனுஷ்!



நடிகர் தனுஷின் ரசிகர் மன்றம், 'தனுஷ் நற்பணி இயக்கம்' என மறுசீரமைக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தி அரசியல் மற்றும் திரையுலக வட்டாரங்களில் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. கோவையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இளைஞர்கள், மகளிர் உள்ளிட்ட மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் ரசிகர் மன்றத்தை நற்பணி இயக்கமாக முறைப்படுத்திச் செயல்படுத்த ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இயக்கத்திற்கான பிரத்யேக லோகோவும் புதுப்பிக்கப்பட்ட கொடியும் நிர்வாகிகள் முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட்டன. முன்னதாக ஜூலையில் சிவப்பு, வெள்ளை நிறக் கொடி அறிமுகமானதாகவும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள், விஜயின் பாதையில் தனுஷும் அரசியலுக்கு வருகிறாரா என்ற கேள்வியை எழுப்பியுள்ளன. அவரது சமீபத்திய மேடைப் பேச்சுகளும் ரசிகர் மன்ற நடவடிக்கைகளும் இந்த விவாதங்களுக்கு வலுசேர்த்துள்ளதாகக் கூறப்படுகிறது. இருப்பினும், தனுஷின் நேரடி அரசியல் பிரவேசத்தை உறுதிப்படுத்தும் அதிகாரப்பூர்வ அறிவிப்பு செய்தியில் இடம்பெறவில்லை. எனவே, அமைப்பின் பெயர் மாற்றத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அவரது அரசியல் வருகை உறுதியாகிவிட்டதாகக் கருத முடியாது என்பதே தற்போதைய நிலை.

## சூரி 7 படப்பிடிப்பைத் தொடங்கி வைத்த சிவகார்த்திகேயன்!

சூரி நடிக்கும் புதிய படத்தின் படப்பிடிப்பு சென்னையில் அக்டோபர் 14 அன்று தொடங்கியது. சிவகார்த்திகேயன் கிளாப் போர்டு அடிக்க, தயாரிப்பாளர் எல்ரெட் குமார் கேமராவை இயக்கினார். 'இன்று நேற்று நாளை', 'அயலான்' படங்களின் இயக்குநர் ஆர். ரவிகுமார் இயக்கும் இப்படத்தை மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கிறது. தற்காலிகமாக 'சூரி 7' எனப் பெயரிடப்பட்டுள்ள இப்படத்தின் தொடக்க விழாவில் வெற்றிமாறன் உள்ளிட்ட திரையுலகினர் பங்கேற்றனர்.

# முகேஷ் அம்பானிக்கு மோடி அரசு கொடுத்த சர்ப்ரைஸ்.. இதுதான் நவராத்திரி கிஃப்ட்டா..!!



புதுடெல்லி, அக். 16–

இந்தியா கச்சா எண்ணெய் சுத்திகரிப்பிலும், டீசல் ஏற்றுமதியிலும் பெரும் பங்கு வகிக்கும் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்குச் சாதகமாக மிகப்பெரிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அமெரிக்கா முதல் ஐரோப்பா வரையில் உலகம் முழுவதும் டீசல் தட்டுப்பாடு அதிகமாக இருக்கும் வேளையில் இறக்குமதி செய்யப்படும் டீசல் விலை ராக்கெட் வேகத்தில் உயர்ந்து வரும் வேளையில், இந்திய அரசு 15 நாளுக்கு ஒரு முறை எரிபொருள் ஏற்றுமதியில் இருக்கும் லாப அளவீடுகளுக்கு ஏற்ப மாற்றப்படும் விண்ட்ஃபால் வரியில் மத்திய அரசு புதிய திருத்தம் செய்துள்ளது.

இதன் அடிப்படையில் மத்திய அரசு பெட்ரோல் ஏற்றுமதி மீதான விண்ட்ஃபால் வரியை ஒரு லிட்டருக்கு 0.5 ரூபாயில் இருந்து 2.5 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இதேபோல் தற்போது உலக நாடுகளில் முக்கிய தேவையாக இருக்கும் 'டீசல்' ஏற்றுமதி மீதான விண்ட்ஃபால் வரி ஒரு லிட்டருக்கு 16 ரூபாயில் இருந்து 8.5 ரூபாயாகக் குறைக்கப்பட்டு உள்ளதாகவும், அக்டோபர் 16ஆம் தேதி முதல் புதிய வரி நடைமுறைக்கு வரும் என மத்திய மறைமுக வரி மற்றும் சுங்க வரி அமைப்பு அறிவித்துள்ளது.

ஆகஸ்ட் மாசம் ஏஞ்சல்ஒன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்திய எரிபொருள் ஏற்றுமதி சந்தையில் 75 சதவீதம் பங்கீட்டை தனியார் நிறுவனமானரிலையன்ஸ்இண்டஸ்ட்ரீஸ் கொண்டுஉள்ளதாகத்தெரிவித்துள்ளது. 75 சதவீதம் என்பது கிட்டத்தட்ட ஒரு மோனோபோலி போன்றது.

குஜராத்தில் இருக்கும் ஜாம்நகர் சுத்திகரிப்பு ஆலையில் இருந்து ஐரோப்பா, அமெரிக்கா, பிரேசில், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ரிலையன்ஸ் ஏற்றுமதி செய்து வருவதாகத் தெரிவித்துள்ளது. மேலும் விமான எரிபொருள் மீதான வரியில் எவ்விதமான மாற்றத்தையும் மத்திய அரசு கொண்டு வரவில்லை.

இது தொடர்பாக மத்திய அரசு கொடுத்த விளக்கத்தில் சர்வதேச கச்சா எண்ணெய் விலை மற்றும் பெட்ரோலியம் பொருட்கள் மீதான விலை ஆகியவற்றின் அடிப்படையில் பெட்ரோல் மீதான ஏற்றுமதி வரியை உயர்த்தியும், டீசல் மீதான ஏற்றுமதி வரியைக் குறைக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

புதிய வரியின் கீழ் பெட்ரோல் மீதான ஏற்றுமதி என்பது 5 மடங்கு அதிகரிக்கப்பட்டு உள்ளது. டீசல் மீதான வரி லிட்டருக்கு 7.5 ரூபாய் குறைக்கப்பட்டு உள்ளது. டீசல் மீதான வரி குறைப்பு ரிலையன்ஸ்–க்கு ஜாக்பாட் ஆக மாறக்கூடும்.

இந்தியாவில் விண்ட்ஃபால் வரி என்பது 2022 ஜூலை மாதம் தான் முதல் முறையாக அறிமுகமானது, அப்போது கச்சா எண்ணெய் விலை அதிரடியாக உயர்ந்தது மூலம் பல முன்னணி நிறுவனங்கள் இந்தியாவில் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியம் பொருட்களை அதிக விலைக்கு வெளிநாட்டில் விற்பனை செய்ய முடிவு செய்தது. இந்த அதீத லாபத்தில் அரசு பலன் அடையும் விதமாக இந்த விண்ட்ஃபால் வரி கொண்டு வரப்பட்டது.

மத்திய அரசு கச்சா எண்ணெய் விலை சரிவடைய துவங்கிய வேளையில் 2 வருடத்திற்குப் பின்பு இவ்வரியை திரும்பப் பெற்றது, ஆனால் ஈரான் போருக்கு வெடித்த பின்பு மார்ச் 2026ல் மீண்டும் நடைமுறைப்படுத்தியது.

பிரெண்ட் கச்சா எண்ணெய் ஒரு பேரல் 105.5 டாலருக்கும், WTI கச்சா எண்ணெய் 97.41 டாலருக்கும் வர்த்தகமாகி வருகிறது.

இந்தியாவில் இருந்து உலக நாடுகளுக்கு சுமார் 85 பில்லியன் டாலர் மதிப்பிலான பெட்ரோலியம் பொருட்கள் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏற்றுமதிக்காகவும், உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும் 23 சுத்திகரிப்பு ஆலை இந்தியாவில் இயங்கி வருகிறது.

இந்தியாவில் இருந்து அதிகம் ஏற்றுமதி செய்யப்படும் பெட்ரோலியம் பொருள் என்றால் டீசல் தான், ஏப்ரல் – ஆகஸ்ட் மாதம் வரையிலான 4 மாதங்களில் 1627 மெட்ரிக் டன், 1484 மெட்ரிக் டன், 1339 மெட்ரிக் டன், 2438 மெட்ரிக் டன், 2089 மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளது என மத்திய அரசின் PPAC அமைப்பின் தரவுகள் கூறுகிறது.

டீசலுக்கு பின்பு தான் மோட்டார் ஸ்பிரிட் என்ற கேசோலின் வருகிறது, இதே காலகட்டத்தில் 887 மெட்ரிக் டன், 910 மெட்ரிக் டன், 974 மெட்ரிக் டன், 1348 மெட்ரிக் டன், 1304 மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளது.

இந்தியா உலகின் 2வது பெரிய கச்சா எண்ணெய் இறக்குமதி நிறுவனமாக இருந்தாலும், கடல் வழியாக அனுப்பும் டீசல் ஏற்றுமதியில் உலக வர்த்தகத்தில் 10 சதவீத பங்கீட்டை இந்தியா கொண்டு உள்ளது. உலகில் பல நாடுகள் பைப்லைன் வழியாக டீசல் ஏற்றுமதி செய்கிறது.

இப்படி இந்தியாவில் ஏற்றுமதி செய்யப்படும் டீசலில் பெரும் பங்கு வகிப்பது ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், இதேவேளையில் இந்தியாவில் வேறு எந்த நிறுவனத்திற்கும் இல்லாத சலுகை முகேஷ் அம்பானிக்கு உள்ளது. அமெரிக்க அரசு வெனிசுலா கச்சா எண்ணெய் வாங்க ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ்–க்கு சிறப்பு அனுமதி கொடுத்துள்ளது.

ஜூலை மாதம் மட்டும் ரிலையன்ஸ் ஜாம்நகரில் இருந்து ஐரோப்பாவுக்கு மட்டும் 4 – 5 மில்லியன் பேரல் பெட்ரோலியம் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு 10 மாத உயர்வை எட்டியுள்ளதாக கெப்லர், வோர்டெக்ஸ் ஆகியவற்றின் தரவுகள் அடிப்படையாக ராய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

# கடன் வாங்கியவர்களுக்கு அடுத்த நெருக்கடி? வட்டி உயர்ந்தால் எகிறும் EMI!



புதுடெல்லி, அக். 16–

பணவீக்கம், ரூபாய் மதிப்புச் சரிவு, கச்சா எண்ணெய் விலை உயர்வு ஆகியவற்றால் ரிசர்வ் வங்கி மீண்டும் ரெப்போ வட்டியை உயர்த்தலாம் என வங்கிகளின் ஆய்வறிக்கை களை மேற்கோள்காட்டி செய்தி தெரிவிக்கிறது. டிசம்பர் கூட்ட த்திற்கு முன்பே நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும், வட்டி மேலும் 0.25 முதல் 0.50 சதவீதப் புள்ளிகள் வரை உயரக்கூடும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உயர்த்தப்பட்டால், மாறும் வட்டியுடன் இணைக்கப்பட்ட வீட்டுக்கடன் உள்ளிட்ட கடன்களின் மாதத் தவணை அல்லது திருப்பிச் செலுத்தும் காலம் அதிகரிக்கலாம். புதிய வாகனக் கடன், தனிநபர் கடன்களுக்கான வட்டியும் உயர வாய்ப்புள்ளது.

எனினும், எல்லாக் கடன்களுக்கும் உடனடியாக ஒரே மாதிரியான மாற்றம் ஏற்படாது. கடன் ஒப்பந்தம், வட்டி வகை, வங்கியின் நடைமுறை ஆகியவற்றைப் பொறுத்து தாக்கம் மாறுபடும். இது ஆய்வறிக்கைகளின் எதிர்பார்ப்பு மட்டுமே; புதிய வட்டி உயர்வு குறித்த ரிசர்வ் வங்கியின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு அல்ல. கடனாளிகள் தங்கள் வங்கியின் அறிவிப்புகளைக் கவனிப்பது அவசியம்.



## இந்து சமய அறநிலையத்துறை,
## அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயில்,
## குச்சனூர், உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம்.

**பசலி 1436 பொது ஏலம்/டெண்டர் அறிவிப்பு**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், குச்சனூர் அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் கீழ்கண்ட பலவகை இனங்களுக்கு இனம் 1க்கு பசலி 1436 முதல் 1438 வரை (30.10.2026 முதல் 30.06.2029 வரை) இனம்–2க்கு பசலி 1436க்கு மட்டும் (30.10.2026 முதல் 30.06.2027 வரை) அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கான பொதுஏலம்/டெண்டர் வருகின்ற 29.10.2026–ம் தேதி வியாழக்கிழமை முற்பகல் 12.00 மணியளவில் மேற்படி திருக்கோயிலில் வைத்து தேனி. இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அவர்கள் முன்னிலையில் நடைபெறும். தேவையுள்ளவர்கள் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் கோரலாம்.

| வ. எண் | ஏல விபரம் | உரிம காலம் | முன் வைப்புத் தொகை | டெண்டர் படிவம் விலை |
|---|---|---|---|---|
| 1. | இராஜவாய்க்காலில் பக்தர்களால் கழற்றி விடப்படும் பழைய துணிகளை சேகரித்துக் கொள்ளும் உரிமம் | பசலி 1436 முதல் பசலி 1438 வரை (30.10.2026 முதல் 30.06.2029 முடிய) | ரூ.1,00,000/– | ரூ.200/– |
| 2. | திருக்கோயில் வளாகத்தில் பக்தர்கள் விட்டுச் செல்லும் தேங்காய் முடிகளை சேகரித்துக் கொள்ளும் உரிமம் | பசலி 1436–க்கு மட்டும் (30.10.2026 முதல் 30.06.2027 முடிய) | ரூ.10,000/– | ரூ.200/– |

ஏல நிபந்தனைகள் மற்றும் முழு விபரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**திருமதி.ச.சுபிதா,பி.ஏ.பி.எல்.**
செயல் அலுவலர்(கூ.பொ)

**திரு.தி.தீபன்,எம்.சி.ஏ.**
தலைவர் பரம்பரை அறங்காவலர் குழு

**பரம்பரை அறங்காவலர்கள்**

1. திரு.பி.அமரதீபன், 2. திரு.மு.சுகுமாறன், 3. திருமதி.தி.கற்பகம் 4. திரு.தி.ரவிக்குமார் 5.திருமதி.தி.பாமுலட்சுமி

நாள்: 13.10.2026
இடம்: குச்சனூர்

வெ.ஆ.எண். 217/2026/செ.ம.தொ.அ./தேனி/ நாள்: 15.10.26

# வேலை வாய்ப்பு

## செவிலியர் ஆட்சேர்ப்பு: 237 காலிப்பணியிடங்கள்!



திருப்பூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட நலவாழ்வுச் சங்கங்களில், ஒப்பந்த அடிப்படையில் மொத்தம் 237 செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. விண்ணப்பதாரர்கள் அந்தந்த மாவட்டத்திற்கான கடைசித் தேதிக்குள் ஆஃப்லைன் முறையில் விண்ணப்பிக்க வேண்டும்.

| விவரங்கள் | திருப்பூர் DHS | செங்கல்பட்டு DHS |
|---|---|---|
| நிறுவனம் | மாவட்ட நலவாழ்வுச் சங்கம் திருப்பூர் | மாவட்ட நலவாழ்வுச் சங்கம் செங்கல்பட்டு |
| வேலை வகை | தமிழ்நாடு அரசு வேலை | தமிழ்நாடு அரசு வேலை |
| பதவியின் பெயர் | செவிலியர் (Staff Nurse) | செவிலியர் (Staff Nurse) |
| பணி நியமனம் | ஒப்பந்த அடிப்படை | ஒப்பந்த அடிப்படை |
| காலிப்பணியிடங்கள் | 122 | 115 |
| பணியிடம் | திருப்பூர், தமிழ்நாடு | செங்கல்பட்டு, தமிழ்நாடு |
| விண்ணப்பம் தொடங்கும் தேதி | 12.10.2026 | 11.10.2026 |
| விண்ணப்பிக்கக் கடைசித் தேதி | 26.10.2026 மாலை 5 மணி | 24.10.2026 மாலை 5 மணி |
| விண்ணப்பிக்கும் முறை | ஆஃப்லைன் | ஆஃப்லைன் |

அதிகாரப்பூர்வ இணையதளம்
தமிழ்நாடு தேசிய நலவாழ்வுக் குழுமம்
செங்கல்பட்டு மாவட்ட இணையதளம்

குறிப்பு: கல்வித்தகுதி, வயது வரம்பு, விண்ணப்பப் படிவம், தேவையான ஆவணங்கள் மற்றும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி ஆகியவற்றை அந்தந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பில்

## தங்கம், வெள்ளி விலையில் மாற்றமில்லை!



சென்னை, அக். 16–

தங்கம் விலையில் மாற்றமின்றி விற்பனை செய்யப்படுகிறது. அதன்படி சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு சவரன் ரூ.1,08,120–க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிராம் ரூ.13,515–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையிலும் இன்று மாற்றமில்லை. வெள்ளி ஒரு கிராம் ரூ.240–க்கும், ஒரு கிலோ 2 லட்சத்து 40ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## ஆயுத பூஜை: விமானக் கட்டணம் கிடு கிடு உயர்வு!




சென்னை, அக். 16–

சென்னை – தூத்துக்குடி இடையே சாதாரண நாள் கட்டணம் ரூ.7,201; இன்றைய கட்டணம் ரூ.17,363, சென்னை – மதுரை இடையே சாதாரண நாள் கட்டண ரூ.5,066; இன்று விமானக் கட்டணம் ரூ.8,527

சென்னை – கோவைக்கு ரூ.16,601; சென்னை திருச்சிக்கு ரூ.9,896 இன்று விமானக் கட்டணம் நிரணயிக்கப்பட்டுள்ளது. சென்னை – கோவை வழக்கமான கட்டணம் ரூ.4,966 இன்றைய கட்டணம் ரூ,16,234, சென்னை – சேலம் வழக்கமான கட்டணம் ரூ.4,001, இன்றைய கட்டணம் ரூ.12,132 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து கொச்சிக்கு ரூ.18,255, பெங்களூருவுக்கு ரூ.18,041ஆக விமானக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. சென்னை – ஹைதராபாத் இடையே சாதாரண நாள் கட்டணம் ரூ.4,467; இன்றைய கட்டணம் ரூ.21,665 ஆக உயர்ந்துள்ளது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881





## இன்றைய கார்ட்டூன்



கூட்டணிக் கதவு திறக்கலையா... கரப்பானுக்கும் மாலை ரெடி!

# சவுதி அரேபியாவில் நீடிக்கும் பதற்றம்; அக்.,20 வரை ஏர் இந்தியா விமான சேவை ரத்து!

புதுடில்லி, அக்.16–

ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சவுதி அரேபியா மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். ரியாத்தில் உள்ள விமான நிலையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இந்தியர் உள்பட 12 பேர் கொல்லப்பட்டனர். அந்த விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (அக்.,17) வரை அங்கு விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளது.




தற்போது, சவுதி அரேபியாவுக்கான ஏர் இந்தியா விமானங்களின் சேவை அக்.,20ம் தேதி வரை ரத்து செய்யப்படுவதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிட்ட எக்ஸ் தளப்பதிவில்; சவுதி அரேபியாவில் நிலவும் பதற்றமான சூழலால், அக்., 20 வரை ரியாத், தம்மாம் மற்றும் ஜெட்டா ஆகிய நகரங்களுக்கு இடையேயான அனைத்து ஏர் இந்தியா விமான சேவைகளும் ரத்து செய்யப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு முழுக் கட்டணமும் திரும்ப வழங்கப்படும். சூழ்நிலையைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். பயணிகளின் பாதுகாப்பே எங்களின் முதன்மையான நோக்கம், இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# வடகிழக்கு பருவமழை அடுத்த மாதம் தீவிரமடைந்து 6 சுற்றுகளாக கொட்டித் தீர்க்கும்- 2 புயல்கள் உருவாக வாய்ப்பு!

சென்னை, அக். 16–

தமிழகத்தில் இந்த ஆண்டு சூப்பர் எல் நினோ பாதிப்பு காரணமாக வரலாறு காணாத அளவுக்கு மழைப்பொழிவு இருக்கும் என்று வானிலை ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். இதனால் வடகிழக்கு பருவமழை எந்த மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறதோ? என்கிற அச்சம் பரவலாகவே நிலவி வருகிறது.



ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழை காலங்களில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்கள் கடுமையான பாதிப்பை சந்தித்து வருகின்றது.

அதே போன்று வட மாவட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் வடகிழக்கு பருவமழை வெள்ள பாதிப்பையும் ஏற்படுத்தி இருக்கிறது. குறிப்பாக சென்னையில் வெள்ள பாதிப்பு என்பது சாதாரண மழைக்கே கடும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே இருக்கும். சென்னையில் பெரு வெள்ளம் ஏற்பட்டபோது அதிகபட்சமாக 40 செ.மீ. அளவுக்கு மழை பெய்தது. அந்த மழை பாதிப்பு சென்னை மக்களுக்கு பெரிய அளவில் சிரமத்தை ஏற்படுத்தியது.

இதுபோன்ற சூழலில் தான் 60 செ.மீ. மழைக்கு மேல் தமிழகம் முழுவதும் பரவலாக மழைப்பொழிவு இருக்கும் என்று வானிலை ஆய்வாளர்கள் கூறி இருப்பதால், தமிழக அரசு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை வேகப்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை எப்படி இருக்கும் என்பது பற்றி தனியார் வானிலை ஆய்வாளரான ஹேமந்த் சந்தர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

சூப்பர் எல் நினோ காரணமாக இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த மாதம் முதல் டிசம்பர் 31 –ந்தேதி வரையில் 3 மாதங்களில் 44 செ.மீ அளவுக்கு இயல்பாக மழை பதிவாக வேண்டும். ஆனால் இந்த ஆண்டு 50 முதல் 60 செ.மீ மேல் அதிக மழை பதிவாகும்.

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் புதுச்சேரி, காரைக்காலில் அதி கனமழைக்கும், குறுகிய நேரத்தில் அதிக மழைக்கும் வாய்ப்பு உள்ளது. வடகடலோரம், காவிரி டெல்டா, தென் கடலோரம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் இயல்பை விட அதிக மழை பதிவாக கூடும். சூப்பர் எல் நினோ தாக்கத்தால் காற்று பாதிப்பை ஏற்படுத்தும் புயல் உருவாக வாய்ப்பு இல்லை. மழை தரும் புயல்கள் உருவாகலாம்.

வங்கக்கடல் மற்றும் அரபிக்கடலில் தலா ஒரு புயல் உருவாக வாய்ப்பு உள்ளது. அக்டோபர் 20 முதல் டிசம்பர் 20 வரை 2 மாதங்கள் வடகிழக்கு பருவமழை 6 சுற்றுகளாக மழைப் பொழிவை கொடுக்கும். அடுத்த மாதம் பிரதான மழை மாதமாக அமையும். அப்போது வடகிழக்கு பருவமழை தீவிரமடையும்.

சூப்பர் எல் நினோ 2–ம் கட்ட தாக்கம் வடகிழக்கு பருவமழை காலக்கட்டத்தில் அமைந்து குறுகிய நேரத்தில் அதீத கனமழை, பெருமழை நிகழ்வுகளை ஏற்படுத்தும் என எதிர்ப்பார்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே வங்கக்கடல் மற்றும் அரபிக்கடலில் ஒரே நேரத்தில் 2 புயல் சின்னங்கள் உருவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தென்கிழக்கு வங்கக்கடல் அதையொட்டிய அந்தமான் கடலில் அடுத்த வாரம் மேலடுக்கு காற்று சுழற்சி உருவாக வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக தமிழகத்தையொட்டிய தென்கிழக்கு வங்க கடலில் காற்று அழுத்த தாழ்வு பகுதி உருவாகும். அதே கால கட்டத்தில் தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதையொட்டிய லட்சத்தீவு பகுதிகளில் மேலடுக்கு காற்று சுழற்சியும் உருவாக இருப்பதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்த புயல் சின்னங்களும் தமிழகத்தில் பெரிய அளவில் மழைப்பொழிவை கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சபரிமலையில் தங்கும் அறைகளுக்கான முன்பதிவில் மோசடி!

சபரிமலை, அக். 16–

இடைத்தரகர்களை பயன்படுத்தி சபரிமலையில் தங்கும் அறைகளுக்கான முன்பதிவிலும் மோசடி நடந்துள்ளது. ஐப்பசி மாத பூஜைக்காக சபரிமலை அய்யப்பன் கோவில் நடை (சனிக்கிழமை) மாலை திறக்கப்படுகிறது. 19–ந் தேதி முதல் 22–ந் தேதி வரை 5 நாட்கள் சிறப்பு பூஜை, வழிபாடு நடைபெறும். இதையொட்டி சன்னிதானத்திற்கு வரும் பக்தர்களின் வசதிக்காக கடந்த 7–ந் தேதி முதல் ஆன்லைன் மூலம் தங்கும் அறைகளுக்கான முன்பதிவு வசதி தொடங்கப்பட்டது. மொத்தம் உள்ள 400 அறைகளில், 190 அறைகள் மட்டுமே ஆன்லைனில் முன்பதிவு வழங்கப்பட்டது. மீதமுள்ளவை சன்னிதானத்தில் நேரடியாக பக்தர்களுக்கு ஒதுக்கப்பட்டு வந்தன. நேரடி ஒதுக்கீட்டில் முறைகேடுகள் நடப்பதாக புகார்கள் எழுந்தன. இதனை தொடர்ந்து 400 அறைகளும் முழுமையாக ஆன்லைனுக்கு மாற்றப்பட்டது. அதே சமயத்தில் முன்பதிவு தொடங்கிய 2 நாளில் அனைத்து நாட்களுக்குமான பெரும்பான்மையான அறைகளும் முன்பதிவு செய்யப்பட்டன. இதில் சந்தேகம் ஏற்பட்டது.



உடனே சாமி தரிசனத்திற்காக பதிவு செய்யப்பட்ட விர்ச்சுவல் ‘கியூ’ பட்டியலையும், ஆன்லைனில் அறைகளை முன்பதிவு செய்தவர்களின் பெயர்களையும் அதிகாரிகள் ஒப்பிட்டு ஆய்வு செய்தனர். அறைகளை முன்பதிவு செய்த பெரும்பான்மையான நபர்களின் பெயர்கள் தரிசனத்திற்கான ஆன்லைன் முன்பதிவு பட்டியலில் இடம் பெறவில்லை. போலி அடையாள அட்டை ஆவணங்களை தவறாக பயன்படுத்தி, இடைத்தரகர்கள் பெரும்பாலான அறைகளை முன்கூட்டியே மொத்தமாக பதிவு செய்ததை கண்டுபிடித்தனர். அதாவது இடைத்தரகர்கள் அறையை முன்பதிவு செய்து தேவைப்படும் நேரத்தில் பக்தர்களிடம் கூடுதல் விலைக்கு மறுவாடகைக்கு கொடுத்து கொள்ளை லாபம் ஈட்டுவது அம்பலமானது.

# ரேஷன் கடைகள் ஞாயிற்றுக்கிழமை இயங்கும்: தமிழக அரசு!

சென்னை, அக். 16–

தொடர் விடுமுறையின் காரணமாக குடும்ப அட்டைதாரர்கள் பாதிப்படையக் கூடாது என்பதை கருத்தில் கொண்டு 18–ந்தேதி அனைத்து ரேஷன் கடைகளும் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை கமிஷனர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:–

ஆயுதப்பூஜை (19–ந்தேதி), சரஸ்வதி பூஜை (20–ந்தேதி) தொடர் விடுமுறையின் காரணமாக பொது விநியோக திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்கள் பாதிப்படையக் கூடாது என்பதை கருத்தில் கொண்டு 18–ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) அனைத்து ரேஷன் கடைகளும் இயங்கும். இந்த விடுமுறையை ஈடு செய்யும் விதமாக நவம்பர் 21–ந்தேதி (சனிக்கிழமை) விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அக்.17-ல் தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டம்!

சென்னை, அக். 16–

சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள திமுக தலைமை அலுவலகத்தில் அக்.17ம் தேதி அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளதாக கட்சியின் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில், கட்சி மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், 17–10–2026 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், ‘முரசொலி மாறன் வளாகத்தில்’ உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

அதுபோது, கட்சி மக்களவை மாநிலங்களவை தவறாது கலந்து கொள்ளுமாறு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.’’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

எஸ்.ஐ.ஆர்.முறைகேடு தொடர்பாக இந்தியா கூட்டணியினர், கரப்பான்பூச்சி கட்சி, ஆம் ஆத்மி, மாணவர் அமைப்புகள் போராட்டத்தை முன்னெடுத்து நிலையில், திமுக இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.




எஸ்.ஐ.ஆர். விவகாரத்தில் திமுக தீவிரமான எதிர்ப்பை பதிவு செய்யவில்லை என தவெக குற்றம் சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவுக்கு எதிராக அதிமுக வழக்கு: விரைவில் விசாரணை!

சென்னை, அக். 16–

சென்னை ஜார்ஜ் டவுண் கோர்ட்டில், அ.தி.மு.க., மாவட்ட செயலாளர் ஆதி ராஜாராம் தாக்கல் செய்துள்ள மனுவில், “கடந்த 10–ந்தேதி தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, அ.தி.மு.க.வுக்கும் தி.மு.க.வுக்கும் இடையே ரகசிய ஒப்பந்தம் உள்ளது. மதுராந்தகம் இடைத்தேர்தலில் அ.தி.மு.க. நிர்வாகிகள் இரட்டை இலை அல்லது சுயேச்சை சின்னத்திற்குப் பதிலாக தி.மு.க.வின் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டனர். பதிலுக்கு தி.மு.க.வினர் இரட்டை இலைக்கு வாக்கு கேட்டனர். சுமார் 70 லட்சம் ரூபாய் பணப்பட்டுவாடா மூலம் வாக்குகள் மாற்றப்பட்டுள்ளது என்று அவதூறாக பேசியுள்ளார்.



எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல், உள்நோக்கத்தோடு, அ.தி.மு.க.வுக்கும், பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும் உள்ள நற்பெயருக்கு களங்கம் ஏற்ப டுத்தும் வகையில் பேசியுள்ளார். மேலும். அ.தி.மு.க. தொண்டர்களை தனது கட்சிக்கு இழுக்கும் நோக்கில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தொடர்ந்து அவதூறு பரப்பி வருகிறார். எனவே, அவர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுத்து தண்டிக்க வேண்டும்’’ என்று கூறியிருந்தார். இந்த மனு வருகிற 21–ந்தேதி விசாரணைக்கு வரவுள்ளது.

# விமானங்களில் தரம் குறைந்த ‘பவர்பேங்க்’ எடுத்துச்செல்ல தடை!

சென்னை, அக். 16–

சென்னை வந்த விமானத்தில் தீ விபத்து ஏற்பட்டதால், இனி விமானங்களில் தரம் குறைந்த ‘பவர்பேங்க்’ எடுத்துச்செல்ல விமான பாதுகாப்புத் துறை தடை விதித்துள்ளது.

டெல்லியில் இருந்து கடந்த 11–ந்தேதி 180 பயணிகளுடன் சென்னைக்கு புறப்பட்ட இண்டிகோ விமானம், நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது விமானத்தின் உள்பகுதியில் பொருட்கள் வைக்கும் கேபினில் திடீரென தீ விபத்து ஏற்பட் டது. இதையடுத்து விமானம் ஐதராபாத்தில் அவசரமாக தரை இறக்கப்பட்டது. இதனால் 180 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.



இந்த சம்பவம் தொடர்பாக விமான பாதுகாப்பு துறையினர் நடத்திய விசாரணையில், பயணி ஒருவர் வைத்திருந்த ‘பவர் பேங்க்’ தான் தீ விபத்துக்கு காரணம் என தெரியவந்தது. அந்த ‘பவர்பேங்க்’ போதிய பாதுகாப்பு இல்லாத வகையைச் சேர்ந்தது என்றும் கண்டறியப்பட்டது.

இதையடுத்து, மொபிகின்ஸ் எம்.கே.–பி.பி.–04 மாடல் ‘பவர் பேங்க்’ இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் மற்றும் வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு இயக்கப்படும் விமானங்களில் எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கைப்பை, செக்கின் பேக்கேஜ் மட்டுமின்றி, சரக்கு விமானங்களிலும் இதனை எடுத்துச் செல்லக்கூடாது என உத்தரவிடப்பட் டுள்ளது.

இந்த தடை சென்னை விமான நிலையத்திலும் உடனடியாக அமலுக்கு வந்துள்ளது. இதையடுத்து பயணிகளின் உடைமைகளை பாதுகாப்பு அதிகாரிகள் தீவிரமாகச் சோதனை செய்து வருகின்றனர். மேலும், பயணிகள் தரமான ‘பவர் பேங்க்’குகளை விமானத்தின் உள்ளே எடுத்துச் செல்லும் கைப்பையில் மட்டுமே வைக்க வேண்டும். விமானத்தில் ஏற்றுவதற்காக ஒப்படைக்கும் பயணப்பெட்டியில் வைக்கக்கூடாது என்றும் பயணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# மாதவிடாய் சுகாதார மேலாண்மையை நடைமுறைப்படுத்துங்கள் - பள்ளிகளுக்கு, கல்வித்துறை அறிவுறுத்தல்!

சென்னை, அக்,. 16–

அனைத்துப் பள்ளிகளிலும் மாதவிடாய் சுகாதார மேலாண்மையை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கான விரிவான உத்தரவுகளை சுப்ரீம்கோர்ட்டு வழங்கியுள்ளது. இந்நிலையில் இதுகுறித்து பள்ளிக்கல்வித்துறை சார்பில் அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–




சுப்ரீம் கோர்ட்டு, அனைத்து பள்ளிகளிலும் மாதவிடாய் சுகாதார மேலாண்மையை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. சுப்ரீம்கோர்ட்டு கடந்த ஜனவரி மாதம் 30–ந்தேதி நாளிட்ட தீர்ப்பின் மூலம், அனைத்துப் பள்ளிகளிலும் மாதவிடாய் சுகாதார மேலாண்மையை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கான விரிவான உத்தரவுகளை வழங்கியுள்ளது.

அதன்படி மாணவிகளுக்கு மக்கும் தன்மையுள்ள, உடலுக்கு உகந்த மற்றும் உரமாக்கக்கூடிய சானிட்டரி நாப்கின்கள் இலவசமாக வழங்கப்படுவதை உறுதி செய்யவேண்டும். கழிப்பறைகளுக்குள் அமைக்கப்பட்டுள்ள சானிட்டரி நாப்கின் வழங்கும் எந்திரங்கள் மூலம் சானிட்டரி நாப்கின்கள் கிடைக்க செய்ய வேண்டும். எந்திரங்கள் சாத்தியமில்லாத இடங்களில், பள்ளியில் நியமிக்கப்பட்ட இடம். அதிகாரம் பெற்ற நபர் மூலம் சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்படவேண்டும். ஒவ்வொரு பள்ளியும் மாதவிடாய் சுகாதார மேலாண்மை மூலையை அமைத்து பராமரிக்க வேண்டும். இதனை பள்ளியின் தலைமை ஆசிரியர் நேரில் ஆய்வு செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விஐடி முன்னாள் மாணவர் சங்கம் இந்தூர் கிளை தொடக்கம்!




மத்தியப்பிரதேச மாநிலத்தில் விஐடி முன்னாள் மாணவர் சங்கத்தின் இந்தூர் கிளை தொடங்கப்பட்டது. விஐடி முன்னாள் மாணவர் சங்கத்தின் 65–வது கிளையாக இந்தூர் கிளையை விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வு விஐடி முன்னாள் மாணவர் வலையமைப்பை விரிவுபடுத்துவதில் மற்றொரு மைல்கல்லாக அமைந்தது. இதில், இந்திய தொழில்நுட்ப கழகம் (ஐஐடி) இந்தூர் பதிவாளர் சிபா பிரசாத் ஹோதா, விஐடி போபால் பல்கலைக்கழக ஆலோசகரும், முன்னாள் சிபிஐ இயக்குநருமான ரிஷி சுக்லா ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றனர். தொடக்க விழாவில் விஐடி துணைத் தலைவர் சங்கர் விசுவநாதன், ரமணி பாலசுந்தரம், விஐடி போபால் துணைவேந்தர் சதீஷ் குமார் மோத், இணை துணைவேந்தர் ஸ்ரீதரன், விஐடி முன்னாள் மாணவர் சங்கத்தின் இயக்குநர் கார்த்திகேயன் சிவசண்முகம், உதவி இயக்குநர் பாக்யவீரேஸ்வரன் மற்றும் 100–க்கும் மேற்பட்ட முன்னாள் மாணவர்கள் பங்கேற்றனர்

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020